24.04.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## அடுத்த 5 ஆண்டுகளில் 20 ஜிகா வாட் சூரியஒளி மின் உற்பத்தி செய்ய இலக்கு

கர்நாடகத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் 20 ஜிகா வாட் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அந்த மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூரில் வியாழக்கிழமை கர்நாடக தொழில் வர்த்தகசபைக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த நவீன மின் உற்பத்தி குறித்து 3 நாள்கள் நடைபெறும் பசுமை உச்சிமாநாடு-2015யை தொடக்கிவைத்து அவர் பேசியது:கர்நாடக அரசு கடந்த 2014-இல் சூரியஒளி மின் கொள்கையை வகுத்தது. சூரியஒளி மின்சாரம் தொழில் துறையினருக்கு தோழமையாக உள்ளது. கர்நாடகத்தில் வகுக்கப்பட்டுள்ள சூரியஒளி மின் கொள்கையை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முடிவு செய்துள்ளது.

மாநிலத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் 20 ஜிகா வாட் சூரியஒளி மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விரைவில் அதற்குத் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

சூரியஒளி மின்சார உற்பத்திக்கு தேவையான நிதியை ஒதுக்கவும் அரசு தயாராக உள்ளது. சூரியஒளி மின்சார உற்பத்தியின் பயனை மாநிலத்தின் கடைக்கோடியில் உள்ளவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு.விளைச்சல் செய்யாத நிலங்களில் சூரியஒளி மின் உற்பத்திக்கான உபகரணங்களை பொருத்திக் கொள்ள விவசாயிகள் முன்வர வேண்டும். அதன்மூலம் கிடைக்கும் மின்சாரத்திற்கு உரிய மானியத்தை அரசு வழங்கும். உற்பத்தி செய்யும் ஒரு யூனிட் மின்சாரம் ரூ. 8.40 வீதம் கொள்முதல் செய்யப்படும். காற்றலை மின் உற்பத்தியைத் தொடங்க முன்வரும் விவசாயிகளுக்கும் அரசு ஊக்கம் அளிக்கும். தொழில் துறையில் கர்நாடகம் முன்னணியில் உள்ளது. இதேபோல, சூரியஒளி மின் உற்பத்தியிலும் முதல் இடத்தை பிடிக்கும் என நம்பிக்கை

உள்ளது.அண்மைக் காலமாக நவீன மின் உற்பத்தியில் கர்நாடகம் சாதனைகளை செய்து வருகிறது. சூரியஒளி மின்சார உற்பத்தி தொடர்பாக 10 நாடுகளுடன் இணைந்து செயல்பட மாநில அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் அரசு பாடுபடும்.
சூரியஒளி மின் உற்பத்திக்காக மாநிலத்தில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதி, வாய்ப்புகளை அரசு செய்து தரும் என்றார்.

நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் டி.கே.சிவக்குமார், கூட்டமைப்பின் தலைவர் சம்பத்ராமன், மூத்த துணைத் தலைவர் தல்லம் துவாரகநாத், துணைத் தலைவர் தினேஷ், முன்னாள் தலைவர்கள் சிவக்குமார், சிவசண்முகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப வேளாண்மைத் திட்டம்

பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப வேளாண்மைத் திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி புதன்கிழமை கள ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம் வடவத்தூர் கிராமப் பகுதிகளில் வேளாண் அறிவியல் மையம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறையின் மூலமாக தேசிய அளவில் பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப வேளாண்மை முனைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.வடவத்தூர் கிராமத்தில் செங்குட்டை, ஆயிரங்குட்டை மற்றும் பெரிய கலிங்கு குட்டைகள் ஆழப்படுத்தப்பட்டு, உயர்த்தப்பட்ட கரைப் பகுதிகளை பார்வையிட்ட ஆட்சியர், இந்த குட்டைகளில் நீர் தேங்கியுள்ளதால் அருகிலுள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளின் நீர் மட்டம் 8 முதல் 20 அடி வரை உயர்ந்து விவசாயிகளின் பயன்பாட்டுக்கு பெரிதும் பயன்படும் என்றார்.சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு வேளாண் கருவிகளான ரோட்டாவேட்டார், ஸ்பிரிங் கலப்பை, பருப்பு போடுதல், பார் பிடித்தல், பாத்தி போடுதல், உழி கலப்பை, விசைத் தெளிப்பான் போன்ற கருவிகளை பார்வையிட்டார்.முன்னதாக வேளாண்மை அறிவியல் மையத்தில் பயிற்சி மேற்கொண்ட 5 விவசாயிகளுக்கு ரூ.12,500 மதிப்பில் வேளாண்

இடுபொருள்களை ஆட்சியர் வழங்கினார்.வேளாண் இணை இயக்குநர் கார்த்திகேயன், வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக முதல்வர் மோகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணமூர்த்தி, விரிவாக்க அலுவலர் சுப்ரமணியம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஜெகதீசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பி.உசிலம்பட்டியில் கால்நடைமருத்துவ முகாம்**

பொன்னமராவதி அருகே உள்ள பி.உசிலம்பட்டியில் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் மற்றும் மலடு நீக்க மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது.

பொன்னமராவதி வேளாண்மை துறை, அட்மா திட்டம், கால்நடைத் துறை இணைந்து நடத்திய முகாமுக்கு பொன்னமராவதி வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தலைமை வகித்தார். கால்நடை மருத்துவர் ஜெ. நவநீதகிருஷ்ணன், உசிலம்பட்டி ஊராட்சித் தலைவர் பஞ்சவர்ணம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அட்மா திட்ட ஆலோசனைக் குழுத் தலைவர் காசிகண்ணப்பன் முகாமை தொடக்கிவைத்து விவசாயிகளுக்கு தாது உப்பு கலவை மற்றும் கோ-4 தீவன புல் கரணைகளை வழங்கினார்.

முகாமில், காட்டுப்பட்டி, உசிலம்பட்டி, வேகுப்பட்டி, கீழவேகுப்பட்டி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல், மலடு நீக்கம், குடற்புழு நீக்கம் ஆகிய சிகிச்சைகளை கால்நடை மருத்துவர்கள் ஜெ. நவநீதகிருஷ்ணன், முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் கருப்பையா உள்ளிட்டோர் செய்தனர்.

முகாமுக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் தேவி, பிரியங்கா, ராஜு உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**இயற்கை நீர் ஆதாரங்களை மீட்டெடுக்க புதிய இயக்கம்**

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அறிவுறுத்தல்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள இயற்கை நீர் ஆதாரங்களை மீட்டெடுக்கும் வகையில் இயற்கை நீர் ஆதாரங்கள் மீட்பு இயக்கம் முன்னோடி விவசாயிகளால் விரைவில் தொடங்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்துக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் வந்திருந்தபோது அவரை தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க செயலர் சுவாமிமலை விமலநாதன் தலைமையில்

விவசாயிகள் சந்தித்து, கர்நாடகத்தில் வீணாக கடலில் கலக்கும் நீரை காவிரியில் திருப்பிவிடும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த ஆலோசனை வழங்குமாறு மனு அளித்தனர்.

மனுவைப் பெற்றுக் கொண்ட கலாம், தஞ்சாவூர் மாவட்டத்தில் நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற இயற்கை நீர்ஆதாரங்களை ஏராளமாக உள்ளன. ஆனால் அவை விவசாயத்துக்கு பயனின்றி உள்ளன. ஆகையால் உள்ளூரில் உள்ள இயற்கை நீர் ஆதாரங்களை மீட்டெடுக்க விவசாயிகள் முன் வர வேண்டும். இதேபோல் தான் கோவையில் சிறுதுளி என்ற அமைப்பை வனிதா என்ற பெண் தொடங்கி, உள்ளூரில் உள்ள நீர்நிலைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்று வருகிறார் என்றார்.

இந்த அறிவுரையை ஏற்ற விவசாயிகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆக்ரமிப்பில் மற்றும் பயன்பாடில்லாமல் உள்ள இயற்கை நீர்நிலைகளை மீட்டெடுக்க முடிவு செய்துள்ளனர். அதற்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள விவசாய அமைப்புகளை ஒன்று திரட்டி, இயற்கை நீர் ஆதாரங்கள் மீட்பு இயக்கம் என்ற பெயரில் புதிய இயக்கத்தை விரைவில் தொடங்க உள்ளோம் என்றார் மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் செயலர் சுவாமிமலை விமலநாதன்.

**வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வேளாண்மை வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன் சிங் ரா.சவான் புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 3.86 லட்சம் மதிப்பீட்டில் மிளகு, கிராம்பு ஆகியவற்றைன உலர்த்துவதற்கான சூரிய உலர்த்தியைப் பார்வையிட்டார். பூலன்கோடு கிராமத்தில் அட்மா பண்ணைப் பள்ளியின் நிறைவு விழாவில் கலந்து கொண்டார். பின்னர், வில்லுக்குறியில் தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு தேன்பெட்டிகள் வழங்கப்பட்டு, தேன் உற்பத்தி செய்யப்படுவதையும், அங்கு அமைக்கப்பட்ட மாடித் தோட்டத்தையும் ஆய்வு செய்தார்.

மருந்துக்கோட்டையில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட மண்புழு உரக்கூடம், வலியாற்றுமுகம் மற்றும் கொட்டூர் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள அன்னாசி பரப்பு விரிவாக்கம், வேளாண்மைத் துறை மூலம் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித்

திட்டத்தின் கீழ் திருநந்திக்கரை கிராமத்தில் அமைக்கப்பட்ட மண்புழு தயாரிப்புக் கூடம் ஆகியற்றை ஆய்வு செய்தார்.

இதையடுத்து, தோட்டக்கலை பட்டயப்படிப்பு மாணவர்களுடன் கலந்துரையாடினார். மா, வாழை மற்றும் வாசனைத் திரவியப் பயிர்களில் மேலாண்மை தொழில் நுட்பங்கள் மற்றும் கனமண்டல பழப்பயிர்களின் சாகுபடி நுட்பங்கள் குறித்த இரண்டு புத்தகங்களை வெளியிட்டார்.

ஆய்வின்போது, சார் ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங், வேளாண் இணை இயக்குநர் ராமதாஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நிஜாமுதீன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆனந்தராஜா, தோட்டக்கலைத் துணை இயக்குநர் சிவகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பிகாரில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடுகிறார் ராஜ்நாத்சிங்**



பிகாரில் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இன்று நேரில் பார்வையிட உள்ளார்.

பிகார் மாநிலத்தில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வீசிய திடீர் சூறாவளிக்கு 42 பேர் பலியாகினர் .80 பேர் பலத்த காயமடைந்தனர் .10 மாவட்டங்களில் சூறாவளியால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

பிகாரில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் நிதீஷ் குமார் புதன்கிழமை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டார்இதையடுத்து . இன்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பீகாரி சென்று .புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட உள்ளார்

**தமிழகத்தில் மழை வாய்ப்பு**

தமிழகம், புதுவையில் சில இடங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

குமரிக்கடல் பகுதியில் உருவான வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் சில நாள்கள் மழை பெய்து வந்ததுஇந்த . நிலையில் தமிழகம், புதுவையில் சில இடங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு வெப்பச் சலனத்தின் காரணமாக மழை பெய்யும்வியாழக்கிழமை காலை நிலவரப்படி தமிழகத்தில் ஏற்காடு., தருமபுரி மாவட்டம் ஹரூர் ஆகிய இடங்களில் 20 மிமழை .மீ. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் :வெயிலின் தாக்கம்.பதிவாகியுள்ளது மழை பெய்தாலும், பிற இடங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டதுதமிழகத்தில் வியாழக்கிழமை அதிகபட்சமாக திருத்தணி ., திருப்பத்தூர் ஆகிய இடங்களில் 99 டிகிரி வெப்பம் பதிவாகி இருந்தது . வேலூர், திருச்சி, சேலம், மதுரை, தருமபுரி ஆகிய இடங்களில் 97 டிகிரியும், சென்னை, கடலூர், பாளையங்கோட்டை, புதுவை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 95 டிகிரி வெப்பமும் பதிவாகி இருந்ததுசென்னையைப் பொருத்தவரை வானம் ஓரளவு . அதிகபட்ச வெப்பநிலை .மேகமூட்டத்துடன் காணப்படும்99 டிகிரியும் குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரியாகவும் காணப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

**மாவட்டத்தில் பரவலாக பலத்த மழை**

கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வியாழக்கிழமை இரவு பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. கோடை வெயில் காரணமாக கோவை நகரின் வெப்பநிலை சராசரியாக நூறு டிகிரியை தாண்டியது. இந்நிலையில், கோவையில் வியாழக்கிழமை மாலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இரவு சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பலத்த காற்றுடன் மழை பெய்ததுமாவட்டத்தின் . .பல்வேறு பகுதிகளிலும் பலத்த காற்றுடன் மழை பெய்தது இம்மழைக் காரணமாக கோடை வெப்பம் சற்று தணிந்து குளிர்ச்சி நிலவியது.

**ஈரோட்டில் தொடரும் அடைமழைஈரோடுமொடக்குறிச்சி/**

ஈரோடு மாவட்டத்தில் சில வாரங்களாக தொடர்ந்து அடைமழை பெய்து வருகிறதுகோடை காலம் தொடங்கியுள்ள நிலையில்., வெயிலின் கொடுமை அதிகரித்து வருகிறதுஇருப்பினும் ., சில வாரங்களாக அவ்வப்போது கோடை மழையும் பெய்து வருகிறது.

வியாழக்கிழமை இரவு சுமார் 7.30 மணி அளவில் திடீரென இடி மின்னலுடன் மழை பெய்ததுஅதேபோல பெருந்துறையிலும் நல்ல மழை . .பெய்தது ஆலங்கட்டி மழைமொடக்குறிச்சியில் இடியுடன் கூடிய : அவல்பூந்துறை .ஆலங்கட்டி மழை பெய்தது, எழுமாத்தூர், சிவகிரி, கொடுமுடி, தாமரைப்பாளையம், கருமாண்டம்பாளையம், கணபதிபாளையம், ஊஞ்சலூர் உள்ளிட்ட பகுதிகளில் வியாழக்கிழமை காலை முதல் கடும்வெயில் அடித்ததுஇதனால் பொதுமக்கள் மிகவும் . இந்நிலையில் மாலை.சிரமப்பட்டனர்7 மணிக்கு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யத் தொடங்கியது .8 மணியளவில் பலத்தமழையுடன் ஆலங்கட்டிகள் விழத் தொடங்கினசுமார் அரை மணி .நேரம் இந்த மழை நீடித்தது தொடர்ந்து இரவு .9 மணி வரையும் மழை பெய்து கொண்டிருந்தது. கடும் வறட்சியால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில் நல்ல மழை பெய்தது பொதுமக்கள், விவசாயிகளிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஈரோடு சந்தையில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.200 சரிவு**

ஈரோடு சந்தையில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.200 சரிந்துள்ளது.

இந்தியாவில் புகழ்பெற்ற மூன்று சந்தைகளில் ஈரோடு மஞ்சள் சந்தையும் ஒன்றுஈரோடு சுண்ணாம்பு ஓடையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் . கூடம், கருங்கல்பாளையத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கம், கோபி கூட்டுறவுச் சங்கம், ஈரோடு அருகே செம்மாம்பாளையத்தில் உள்ள ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் ஆகியவற்றில் இச் சந்தை நடைபெறுகிறதுவாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை . சந்தையில் மஞ்சளை விற்பனை .இச் சந்தையில் ஏலம் நடைபெறும் செய்ய ஈரோடு ம ாவட்டம் மட்டுமன்றி திருப்பூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திருச்சி, கரூர், திண்டுக்கல், தேனி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும் தினமும்

வந்துசெல்கின்றனர்மஞ்சளை கொள்முதல் செய்ய தமிழகம் மட்டுமன்றி . கர்நாடகம், ஆந்திரம், கேரளம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள் வருவது வாடிக்கைகடந்த டிசம்பர் . .இறுதியில் ரூ10,000}த்தை தொட்ட ஒரு குவிண்டால் மஞ்சள், பின்னர் ரூ.8,500 வரை வீழ்ச்சி அடைந்ததுஇந்நிலையில் ., ஏப்ரல் முதல் வாரத்தில் இருந்து புது மஞ்சள் வரத்து தொடங்கியதுஇருப்பினும் ., விலை தொடர்ந்து ஏறவும் இல்லை.இறங்கவும் இல்லை .

இந் நிலையில், புதன்கிழமை நிலவரத்துடன் ஒப்பிடும்போது, மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.200 சரிந்துள்ளது.

வியாழக்கிழமை நிலவரப்படி மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.5,499 முதல் ரூ.8,588 வரையிலும், கிழங்கு மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.5,399 முதல் ரூ.7,499 வரையும் விற்பனை ஆனது. வியாபாரிகள் போதுமான அளவு ஆர்டர்களை பெற்றபோதும், வரத்து அதிகம் இருந்ததால் விலை குறையத் தொடங்கியது வியாழக்கிழமை சுமார் .8,500 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டனஅவற்றின் தரத்தை ஆ .ய்வு செய்த பின்னர் வர்த்தகர்கள் விலையை மதிப்பீடு செய்து ரூ.200 குறைந்துள்ளனர் என மஞ்சள் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் பி.மஞ்சள் சந்தையில் ரூ :தெய்வசிகாமணி கூறியது.கே.200 விலை சரிவு என்பது வாடிக்கையானதுதான்.ரூ .1,000-க்கு மேல் விலை சரிந்தால்தான் விவசாயிகள் கவலைப்பட வேண்டும் .

கடந்த ஆண்டு மஞ்சள் விளைச்சல் குறைந்துள்ளதால், இந்த ஆண்டில் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும்.குவிண்டாலுக்கு ரூ .12,000 வரை விலை ஏற வாய்ப்புள்ளதுஎனவே ., விவசாயிகள் உரிய விலை கிடைக்கும்போது விற்பனை செய்ய வேண்டும் என்றார்.

**அரசு கூட்டுறவு ஏல மையம் :60 சதவீத தேயிலை விற்பனை**

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் புதன்கிழமை 60 சதவீத தேயிலை விற்பனையானது. இந்த ஆண்டுக்கான 17-ஆவது ஏலத்தில், மொத்தம் 3.20 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது அதில் இலை ரகம் .2.81 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 1.45

லட்சம் கிலோவும் அடங்கும் இந்த ஏலத்தில்.60 சதவீத தேயிலைத் தூள் விற்பனையானதுஇதில்., அனைத்து ரகத்துக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை சரிந்ததுஇந்த வார விலை ந .ிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.50 முதல் ரூ.55, உயர் வகை ரூ.65 முதல் ரூ.70, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.50 முதல் ரூ.57, உயர் வகை ரூ.69 முதல் ரூ.79 வரை விலை கிடைத்ததுகடந்த சில . வாரங்களாக தேயிலைத் தூள் விற்பனையும், அதன் விலையும் சரிந்து வருவது விவசாயிகள், விற்பனையாளர்களை கவலை அடையச் செய்துள்ளது.

**மே 23-இல் குன்னூரில் பழக் கண்காட்சி விவசாயிகளுக்கு அழைப்பு**

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மே 23,24 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள 57-ஆவது பழக் கண்காட்சியில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுஇதுகுறித்து குன்னூர் தோட்டக்கலைத் துறை உதவி . :இயக்குநர் ராம்சுந்தர் வெளியிட்ட அறிக்கை குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 57-ஆவது பழக் கண்காட்சி மே 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது இந்தப் பழக் கண்காட்சியில் .6 வகையான குளிர் பிராந்திய பழ வகைகள் வைக்கப்படும்பல்வேறு மாவட்டங்களில் . பயிரிடப்பட்ட மா, பலா, வாழை, திராட்சை, அன்னாசி, சப்போட்டா, பப்பாளி, மாதுளை, சீத்தா, கொய்யா போன்ற பழங்களும் வைக்கப்படும் . இப்பழங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட ஜாம், ஊறுகாய் உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களும் இக்கண்காட்சியில் இடம் பெறவுள்ளன. இதில் பங்கேற்கும் விவசாயிகளுக்குப் பரிசுகள் வழங்கப்படவுள்ளனசுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் . பூங்காவிலுள்ள படகு இல்லம், சிறுவர் பூங்கா ஆகியவை மேம்படுத்தப்பட்டுள்ளதுஆர்வமுள்ள விவசாயிகள் ., குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்ட பயிற்சி முகாம்**

குன்னூரில் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெற்ற 3 நாள் பயிற்சி முகாம் புதன்கிழமை நிறைவு பெற்றது. இந்தப் பயிற்சி முகாம் கடந்த திங்கள்கிழமை முதல் புதன்கிழமை வரை தொடர்ந்து 3 நாள்கள் நடைபெற்றது. தோட்டக்கலை உதவி இயக்குநர் விராம்சுந்தர்., உபாசி வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் ராமமூர்த்தி ஆகியோர் இப்பயிற்சி முகாமை நடத்தினர்.

இதில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் ராஜா, வேளாண்மை வணிகம், விற்பனைத்துறை வேளாண்மை அலுவலர் ரமேஷ், இந்திய மண், நீர்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ராஜன் ஆகியோர் விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தனர்.

இப்பயிற்சி முகாமில் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டத்திலுள்ள சுமார் 20 குழுக்களைச் சேர்ந்த 368 விவசாயிகள் பங்கேற்றனர்அனைவருக்கும் தொழிற்நுட்பக் கையேடுகளும் ., சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**9 கால்நடைக் கிளை நிலையங்கள் மருந்தகங்களாகத் தரம் உயர்வு**

திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கி வந்த 9 கால்நடைக் கிளை நிலையங்கள், மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ஆக்கூர், மாங்கால், ஆலத்தூர், நெடும்பிறை, வாழ்குடை, வேலப்பாடி, வெட்டியாந்தொழுவம், நார்த்தாம்பூண்டி, வடமாதிமங்கலம் ஆகிய 9 கிராமங்களில் கால்நடை கிளை நிலையங்கள் இயங்கி வந்தனஇவற்றை கால்நடை . .மருந்தகங்களாகத் தரம் உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டது இதையடுத்து, இவற்றை அமைச்சர் முக்கூர் என்சுப்பிரமணியன் . .புதன்கிழமை திறந்துவைத்தார்

**"இயற்கை உரமாக மண்புழுவை பயன்படுத்தலாம்'**

இயற்கை உரமமான மண்புழு தயாரித்து, விவசாயத்துக்குப் பயன்படுத்தினால் நல்ல பயன்கள் கிடைக்கும் என வேளாண்மைத் துறையின் உதவி இயக்குநர் வே.சத்தியமூர்த்தி கூறினார்.

அனக்காவூர் வேளாண் விரிவாக்கம் மையத்தின் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டம் சார்பில், "அம்மா' பண்ணை மகளிர் குழு விவசாயிகளுக்கு குழு மேம்பாட்டுத் திறன் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

இதில், சத்தியமூர்த்தி தலைமை வகித்து பேசியதாவது:

இயற்கை உரமமான மண்புழு தயாரித்து, விவசாயத்துக்குப் பயன்படுத்தினால் நல்ல பயன்கள் கிடைக்கும்விவசாயத்தை . மேம்படுத்துதல், சிக்கன முறையில் புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தால் குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம்திருந்திய . நெல் சாகுபடி, கரும்புச் சாகுபடி, தோட்டக்கலை பயிர் முறை ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்தலாம் என்றார்.

இதையடுத்து, மண்புழு உரம் தயாரிப்பு, இயற்கை விவசாயம், கறவை மாடு வளர்ப்பு ஆகியன குறித்து முன்னோடி விவசாயி தேவராஜ் பேசினார்.

வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமையைச் சேர்ந்த அலுவலர்கள் பெபாலமுருகன்., சஇளையராஜா., அஅன்பரசு., ப.சௌந்தர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சிறுதானியம் பயிரிட அறிவுரை**

காஞ்சிபுரம்: சித்திரை பட்டத்தில் மானாவாரி மற்றும் இறவையில் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாகும் என, காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர், விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக, காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலைய அலுவலர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
சித்திரை பட்டத்தில் மானாவாரி மற்றும் இறவையில் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாகும். சிறுதானியங்களில் வரகரிசியில் அதிக நார்சத்து உள்ளது. எனவே, வரகில் கே.1, கோ 2, கோ 3, ஏ.பி.கே.1., மற்றும் வம்பன் 1 போன்ற ரகங்களை தேர்வு செய்து, ஒரு ஏக்கருக்கு 4 கிலோ, நல்ல தரமான குறைந்தபட்சம், 75 சதவீதம் முளைப்புத்திறன் கொண்ட வரகு விதைகளை பயன்படுத்தி, ஒன்றரை அடிக்கு, அரை அடி என்ற அளவு, இடைவெளியில் பயிர் பராமரிக்கப்பட்டால், சராசரியாக ஏக்கருக்கு, 59,250 துார்கள் இருக்கும். மகசூலை நிர்ணயிப்பதில் பயிர் எண்ணிக்கை மிக முக்கிய பங்கு வகுக்கிறது. இவ்வாறு பயிர் எண்ணிக்கை பராமரித்தால், 20 சதவீதம் அதிக லாபம் பெறலாம். எனவே, விவசாயிகள் தாங்கள் பயன்படுத்தவுள்ள விதைகள், 75 சதவீதத்திற்கு மேல் முளைப்புத்திறன் உள்ளனவா என்பதை உறுதி செய்த பின் சாகுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.55 லட்சம் பருத்தி வர்த்தகம்**

நாமக்கல்: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 3,500 மூட்டை பருத்தி, 55 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.
நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில்

(என்.சி.எம்.எஸ்.,) உள்ள குடோனில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு, நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு உள்ளிட்ட பல்வேறு பகுதியை சேர்ந்த வியாபாரிகள், ஏலத்தில் பங்கேற்று, பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

நேற்று நடந்த ஏலத்தில், 3,500 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,900, குறைந்த பட்சம், 4,476 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,361, குறைந்த பட்சம், 3,926 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், 3,500 மூட்டை பருத்தி, மொத்தமாக, 55 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## ஆந்திராவில் விளைச்சல் குறைவு எதிரொலிதமிழக தேங்காய்க்கு மும்பையில் வரவேற்பு

ப.வேலூர்:ஆந்திரா மாநிலத்தில், தேங்காய் விளைச்சல் குறைவால், மும்பை மார்க்கெட்டில், தமிழக தேங்காய்க்கு வரவேற்பு அதிகரித்துள்ளது.நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் மற்றும் அதன் சுற்று வட்டராங்களில், 50 ஆயிரம் ஏக்கரில் தென்னை மரம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதில், 50 லட்சம் மரங்களில் இருந்து தேங்காய் அறுவடை செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்பட்ட தேங்காய்களை, உள்ளூர் தேவைக்கும், தமிழகம் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது.இப்பகுதியில், 20க்கும் மேற்பட்ட தேங்காய் மண்டி அமைந்துள்ளது. அவைகள் மூலம், தினமும், 15 லோடு தேங்காய் மும்பைக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், உத்தரபிரதேசம், கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.மும்பை மார்க்கெட்டை பொறுத்தவரை, ஆந்திரா மாநில தேங்காயும், தமிழகத்தில், ப.வேலூர் தேங்காயும் அதிகளவில்

விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு, தமிழ் புத்தாண்டு துவக்கத்தில், மும்பை மார்க்கெட்டுக்கு, ஆந்திரா தேங்காய் அதிகளவில் அனுப்பி வைக்கப்பட்டது.அதனால், தேங்காய் விலை கடும் சரிவை சந்தித்தது. அதை தொடர்ந்து, ப.வேலூர் தேங்காய் விலை கட்டுபடியாகவில்லை. அதன் காரணமாக மும்பைக்கு அனுப்பி வைப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இதே நிலை, கடந்த மூன்று ஆண்டுகளாக, ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதம் நீடித்து வருகிறது. அதன்படி, இந்த ஆண்டும் தமிழ் புத்தாண்டு துவக்கத்தில் விலை சரிவு ஏற்படும் என்பதால், வியாபாரிகள் தேங்காயை அதிகளவில் கொள்முதல் செய்யாமல் இருந்தனர். இந்நிலையில், ஆந்திராவில் தேங்காய் விளைச்சல் குறைந்ததுடன், மார்க்கெட்டுக்கு வரத்தும் இல்லாமல் போனது. இது, தமிழக தேங்காய்க்கு வரவேற்பு அதிகரிக்க காரணமாக அமைந்தது. தற்போது, தேங்காய் விலை குறையாமல், பழைய விலைக்கே மும்பை மார்க்கெட்டில் விற்பனையானது, வியாபாரிகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது.ஒரு தேங்காய், 13 ரூபாய் வீதம், 40 ஆயிரம் தேங்காய் கொண்ட ஒரு லோடு, ஐந்து லட்சம் ரூபாய் வரை, விலைபோகிறது. மேலும், உள்ளூர் தேவையும் அதிக அளவில் உள்ளதால், தேங்காய் தொழில் மற்றும் தென்னை சாகுபடி அமோகமாக உள்ளது. தற்போது பள்ளி, கல்லூரிக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.அதனால், ஹாஸ்டல் தேவைக்கு தேங்காய் பயன்பாடு குறைந்துள்ளது. கோடை விடுமுறைக்கு பின் பள்ளி, கல்லூரி திறக்கும் போது, இதே நிலை நீடித்தால், தேங்காய் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.தேங்காய் வியாபாரிகள் சிலர் கூறியதாவது:தேங்காய் விலை உயர்ந்தாலும், ஓராண்டுக்கு, ஒரு மரத்துக்கு, 800 முதல், 1,100 ரூபாய் வரை குத்தகை தரப்படுகிறது. போதிய மழை இல்லாததால், காய் பிடிப்பு இல்லை. அதனால், தேங்காய் தேவை, மும்பை மார்க்கெட்டில் அதிகரித்தாலும், ஆட்கள் கூலி, லாரி வாடகை, குத்தகை பணம் ஆகியவற்றால் வியாபாரிக்கு லாபம் என்பதும் எதுவும் இல்லை. விவசாயிகளுக்குதான் லாபம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரியில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்லும் நுங்கு

கிருஷ்ணகிரி,:தமிழகத்தில், கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் சுற்றுவட்டார பகுதியில் இருந்து, வெளி மாவட்டங்களுக்கு, நுங்கு விற்பனைக்கு கொண்டு செல்வது அதிகரித்துள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், போச்சம்பள்ளி, மத்தூர் ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில் அதிகளவில் பனை மரங்கள் உள்ளது. பனை மரங்களில் பாளை விடும் சீஸன் ஜனவரியில் துவங்கி, பதனீர் இறக்கி கருப்பட்டி தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது. மார்ச் மாத இறுதியில் இருந்து, ஜூன் மாதம் வரை, நுங்கு வரத்து இருக்கும். கோடையில் தாகத்தை தணித்தும், உடல் சூட்டை சீராக்கும் நுங்கை மக்கள் அதிகம் விரும்பி வாங்கி சாப்பிடுவர். தற்போது, நுங்கு சீஸன் துவங்கியுள்ளதால், கிருஷ்ணகிரி மாவட்டத்தின், பல இடங்களில் சாலையோரம் விற்கப்படும் நுங்கை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சாப்பிடுகின்றனர்.மத்தூர் பஸ் ஸ்டாண்டு அருகே, நுங்குகளை சீவி, பிளாஸ்டிக் பைகளில் கட்டி விற்பனை செய்து வருகின்றனர். மத்தூர் மார்க்கமாக, பெங்களூரு, திருவண்ணாமலை, புதுச்சேரி, வேலூர், விழுப்புரம், சென்னை உட்பட பல்வேறு பகுதிகளுக்கு, பஸ்களில் செல்லும் மக்கள் நுங்குகளை வாங்கி செல்கின்றனர்.இந்தாண்டு, மத்தூர் பகுதியில் வறட்சி நிலவினாலும், பனை மரங்களில் அதிக அளவில் காய்கள் காய்த்துள்ளது. கடந்த ஆண்டு, ஒரு நுங்கு இரண்டு ரூபாயாக விற்பனை செய்யப்பட்டது. தற்போது, மூன்று ரூபாயாக அதிகரித்துள்ளது. அதுவும், மூன்று நுங்கு கொண்ட ஒரு பிளாஸ்டிக் பாக்கெட், 10 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.பஸ் பயணிகள் விரும்பி வாங்கி செல்வதால், மத்தூர் மட்டுமல்லாது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பல இடங்களிலும் நுங்கு விற்பனை ஜரூராக நடந்து வருகிறது. சர்க்கரை நோய் பாதிப்பு உள்ளவர்கள், நுங்கை சாப்பிடலாம் என்றும், அதனால் உடலுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது என்றும் டாக்டர்கள் அறிவுரை செய்வதால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நுங்கை விரும்பி சாப்பிடுகின்றனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தின்

பல்வேறு பகுதிகளில் இருந்து, வெளிமாவட்ட பயணிகள், அதிகளவில் நுங்கை வாங்கி செல்கின்றனர். மேலும், வெளி மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகளும், மத்தூரில் இருந்து நுங்கை, மொத்தமாக வாங்கி சென்று தங்களது பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

**மண் வள அட்டை இயக்கம் தொடக்கம்**

கிருஷ்ணகிரி,:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மண் வள அட்டை இயக்கத்தை, வேளாண்மை இணை இயக்குனர் தொடங்கி வைத்தார்.கிருஷ்ணகிரி மாவட்டம், பையனப்பள்ளி கிராமத்தில், மண் வள அட்டை இயக்கம் தொடங்கப்பட்டது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சபா நடேசன் தொடங்கி வைத்தார். வேளாண் இணை இயக்குனர் சபா நடேசன் பேசியதாவது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல், சிறுதானியம், எண்ணெய் வித்துப் பயிர்கள், பருத்தி, கரும்பு, காய்கறி மற்றும் மலர்கள், என, ஒரு லட்சத்து, 82 ஆயிரத்து, 891 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.மண்ணை பற்றி அறியாமல் தொடர் சாகுபடி செய்வதால், மண்ணின் வளம் குன்றி மகசூலை பாதிக்கும். இதை தவிர்க்க, மண் ஆய்வு செய்து, சமச்சீர் ஊட்டச்சத்துக்களை இட வேண்டியது அவசியமாகிறது. இதை கருத்தில் கொண்டு, மத்திய, மாநில அரசும் இணைந்து, மண்வள அட்டை இயக்கம் செயல்படுத்துகிறது.
மண்ணின் தன்மைக்கேற்ப பயிரை தேர்ந்தெடுத்து அதிக மகசூல் பெறலாம். மேலும், குறைந்த நிலப்பரப்பில் அதிக உற்பத்தி பெறலாம். மண் மாதிரி எடுத்து, ஆய்வு செய்யும் பணி, அடுத்த ஆண்டு ஜனவரி மாததிற்குள் முடித்து, அடுத்த பயிர் பருவத்திற்கு தேவையான பரிந்துரை, விவசாயிகளுக்கு வழங்கப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி, வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன், வேளாண்மை துணை இயக்குனர்கள் ரவி, மணி ஆகியோர் பங்கேற்றனர்.

**கொப்பரை தேங்காய்ரூ.5 லட்சத்துக்கு ஏலம்**

கோபி:கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 134 தேங்காய் பருப்பு மூட்டைகள், ஐந்து லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வாரம் தோறும் வியாழக்கிழமைகளில், கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. அதன்படி, ஈரோடு மாவட்டம் மற்றும் சுற்று பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காய் நேற்று ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.
ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 92.85 முதல், 95.15 ரூபாய்க்கும், சராசரியாக, 94.45 ரூபாய்க்கும் விலை போனது. நேற்று நடந்த ஏலத்தில், 29 விவசாயிகள், ஆறு வியாபாரிகள் பங்கேற்றனர். மொத்தம், 134 மூட்டைகள், ஐந்து லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனதாக, கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் தெரிவித்தார்.

**ஈரோட்டுக்கு மாடுகள் வரத்து குறைவுகண்ணபுரம் சந்தைக்கு வியாபாரிகள் பயணம்**

ஈரோடு:காங்கேயம் அருகே கண்ணபுரம் தேர்த்திருவிழா மாட்டு சந்தை நடப்பதால், ஈரோடு, கருங்கல்பாளையம் சந்தைக்கு, கால்நடைகளின் வரத்து, நேற்று, 40 சதவீதமாக குறைந்து காணப்பட்டது.ஈரோடு, கருங்கல்பாளையத்தில், வாரந்தோறும் புதன் கிழமை அடிமாட்டு சந்தையும், வியாழன் அன்று கறவை மாட்டு சந்தையும் நடக்கிறது.தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் மஹாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள், மாடுகளை வாங்கி செல்வதற்காக வருகின்றனர்.
விவசாயிகள் தங்களது மாடுகளை விற்பனை செய்ய, ஈரோடு, சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வருகின்றனர்.
வழக்கமாக, 500 பசுமாடு, 400 எருமை மாடு என, 900க்கும் மேற்பட்ட கால்நடைகள், விவசாயிகளால், விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஆனால், நேற்று, திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே

கண்ணபுரம் தேர்த்திருவிழாவால், மாட்டுச்சந்தை நடக்கிறது. அங்கு, அதிக அளவில், வியாபாரிகள் மற்றும் மாடுகள் சென்றுள்ளன. இதனால், கருங்கல்பாளையம் சந்தைக்கு, 350 பசுமாடுகள், 250 எருமை மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.
இதுகுறித்து, சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது: காங்கேயம் அருகே, கண்ணபுரம் தேர்த்திருவிழா, அப்பகுதியில் பிரசித்தி பெற்றது. அந்தியூர் குருநாதஸ்வாமி கோவில் போன்று, கண்ணபுரம் சந்தையிலும், தமிழகம், கர்நாடகா மற்றும் மஹாராஷ்டிரா உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த கால்நடைகளும், வியாபாரிகளும் வருவதால், வர்த்தகம் நன்றாக நடக்கும்.
இதனால், நேற்று நடந்த சந்தைக்கு பெரும்பாலான பசு மற்றும் எருமை மாடுகள், அங்கு சென்று விட்டதால், கருங்கல்பாளையம் சந்தைக்கு மாடுகளின் வரத்து, வழக்கமாக வருவதை காட்டிலும், 40 சதவீதம் வரை குறைந்து காணப்பட்டது. அதே நேரத்தில், வியாபாரிகள் அதிகளவில் வந்தபோதும், வியாபாரம் மந்தமாகவே நடந்தது. அடுத்த வாரம் வழக்கம்போல், வர்த்தகம் சூடு பிடிக்கும், என்று எதிர்பார்க்கிறோம், என்றார்.

## ஒரு பனை மரத்தின் விலை 25 ரூபாய்! செங்கல் சூளைகளுக்கு விற்பனை

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம், தேவி பட்டினம் பகுதிகளில் ஒரு மரம் 25 ரூபாய் விலையில் செங்கல் சூளைக்கு வெட்டி விற்கப் படுவதால், பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.
இப்பகுதியில் 15 ஆயிரத்திற்கும் அதிகமான பனைமரங்கள் உள்ளன. இதன் ஓலையில் இருந்து பெறப் படும் விசிறி, ஓலை பெட்டிகள், விதைப்பு கொட்டான், துடைப்பம், ஓலைப்பாய் மற்றும் வீடுகட்ட பயன்படும் பனை சட்டம், பதனீர், கருப்பட்டி, நொங்கு, கிழங்குகள் போன்றவை பொதுமக்களுக்கு பயன்பட்டு வந்தது. நாகரீக வளர்ச்சியின் காரணமாக தற்போது பனை மரங்களின் பயன்பாடு குறைந்து விட்டதால், அவை விறகுகளாக மட்டுமே பயன்பட்டு வருகிறது.

ஆர்.எஸ்.மங்கலம், சனவேளி, பாரனூர், ஆவரேந்தல், தேவி பட்டினம், நாரணமங்களம் பகுதிகளில் உள்ள பனைமரங்கள் தற்போது செங்கல் சூளைகளுக்கு தீ மூட்டுவதற்காக வெட்டப்பட்டு, மொத்த வியாபாரிகளுக்கு விற்கப் பட்டு வருகிறது.

இது குறித்து ஆர்.எஸ்.மங்கலம் சுப்பையா கூறுகையில், ""15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பனைமரத்தின் விலை சுமார் 1000 முதல் 1500 வரை இருந்தது. தற்போது ஒரு மரத்தை ரூ. 25 முதல் ரூ.150 வø ரதான் வியாபாரிகள் விலைக்கு கேட்கின்றனர். அழிவின் விளிம்பிற்கு சென்றுள்ள பனை மரங்களையும், பனைமர தொழிலாளர்களையும் அரசு காப்பாற்ற வேண்டும்," என்றார்.

**வாழை விவசாய நடைமுறைகளில் மாற்றம் வேண்டும்!**

தேனி : அதிக விளைச்சலால் வாழைதார் வீதியில் வீசப்படுவதை தவிர்க்க சித்திரையில் வாழை தார் போடாத வகையில் விவசாய நடைமுறையை மாற்றி அமைக்க வேண்டும் என தோட்டக்கலை துறையினர் தெரிவித்தனர்.

தேனி மாவட்டத்தில் சின்னமனூர், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் 6 ஆயிரம் ஹெக்டேரில் வாழை சாகுபடி செய்கின்றனர். இதில் 75 சதவீதம் திசு வாழை சாகுபடியும், 25 சதவீதம் விதை கிழக்கு முறையில் வாழை சாகுபடி செய்கின்றனர். திசு வாழை சாகுபடியில் "கிரான்நைன்' எனும் பச்சை வாழை அதிகளவு மகசூல் கிடைக்கிறது. அதாவது ஒரு ஹெக்டேரில் 3ஆயிரம் திசு வாழை கன்றுகள் நடவு செய்யப்படுகிறது. திசு வாழையானது ஒரே சீராக வளர்ந்து ஒரே நேரத்தில் மகசூல் கொடுக்கும். ஒரு ஹெக்டேரில் வளர்ந்த 3 ஆயிரம் வாழையில் 2500 வாழைதார்கள் விளைச்சல் ஏற்படுகிறது. ஒரு வாழைதார் குறைந்தபட்சம் 30 கிலோ முதல் 70 கிலோ எடையில் இருக்கும். ஒரு ஹெக்டேரில் ஒரு வெட்டுக்கு 70 டன் மகசூல் கிடைக்கும்.

இப்படி ஒவ்வொரு ஹெக்டேரிலும் அதிகளவு மகசூல் ஏற்படுவதால் அதிகளவு மகசூல் ஏற்பட்டு உரிய விலை கிடைப்பது இல்லை. ஆனால் பழைய முறையிலான விதை கிழக்கு வாழை சாகுபடியில் ஒரே சீரான காய்ப்பு இருக்காது. 100 வாழை ஒரு வாரத்தில் வெட்டுக்கு வந்தால் அடுத்த வாரம் மீதியுள்ள வாழைதார்கள் வெட்டுக்கு வரும் இதனால்

அபரிமிதமான விளைச்சல் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆனாலும் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியை தவிர்க்க இயலாது.வாழை தார்கள் உரிய விலை கிடைக்க வில்லை என ரோட்டில் விவசாயிகள் வீசுவது வேதனை என்றாலும் சித்திரையில் மகசூல் வராத அளவிற்கு நடவு முறைகளை மாற்றி சாகுபடி செய்வது நல்லது. மேலும் இந்த மாதத்தில் மாம்பழம், சப்போட்டா கேரளாவில் இருந்து பலா என இதர பழவகைகள் மார்கெட்டிற்கு அதிகளவு வருவதால் வாழைக்கு உரிய விலை கிடைப்பது இல்லை. எனவே தோட்டக்கலை விவசாயிகள் சித்திரை மற்றும் அதிக காற்று வீசும் மாதமான ஆடியில் வாழை மகசூல் வராத அளவிற்கு சாகுபடி முறையில் மாற்றம் செய்திட வேண்டும் என தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**வடமாநிலங்களுக்கு சிங்கம்புணரி தேங்காய்**

சிங்கம்புணரி : சிங்கம்புணரியில் விளையும் தேங்காய் வடமாநிலத்திற்கு விற்பனைக்காக தினமும் செல்கிறது.சிங்கம்புணரி சுற்று வட்டார விவசாயிகள் மானா வாரியாகவும், இறைவை பாசனத்திலும் தென்னை அதிக அளவில் சாகுபடி செய்துள்ளனர். சில ஆண்டுகளாக போதிய மழையின்றி மானாவாரி தென்னை மரங்கள் பட்டுப்போனது. திறந்தவெளி, ஆழ்குழாய் கிணற்று பாசனத்தில் உள்ள மரங்களில் ஆண்டிற்கு 6 முறை தேங்காய் இறக்கப்படுகிறது. மார்க்கெட்டிற்கு வரும் பச்சை காய்களை மேல் மட்டையை லேசாக உரித்து ரகம் பிரிக்கப்படுகிறது. குஜராத், மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம்,ராஜஸ்தான் உ.பி., மாநிலங்களுக்கு லாரிகளில் தினமும் செல்கிறது.ஆயிரத்து 150 முதல் ரககாய்,ரூ 12 ஆயிரம்,சிறிய ரக காய்கள் ரூ 9-10 ,ஆயிரம் வரை விலை உள்ளது.தேங்காய் வியாபாரி கருணாநிதி கூறியதாவது: தேங்காய்க்கு முன் எப்போதும் இல்லாத கூடுதல் விலை உள்ளது. வறட்சியால் காய்ப்பு குறைந்து மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்துள்ளது.முன்பு வட மாநிலங்களுக்கு தினமும் 3 லோடுசென்றது. ஒரு லோடாக குறைந்து விட்டது.அழுகும் உணவுப் பொருளுக்கு வரியில்லை. பச்சைகாய் அழுகும் தன்மையுடையது. ஒரு சதவீத வரியை ரத்துச்செய்தால் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும், என்றார்.

## ஆந்திரா தர்பூசணி அமோகம்

சிங்கம்புணரி : சிங்கம்புணரியில் கோடையில் குளிர்ச்சி தரும் ஆந்திரா தர்பூசணி அதிகமாக விற்பனையாகிறது.

பஸ்ஸ்டாண்ட், திண்டுக்கல் ரோடு, மேலூர் ரோட்டில் பல இடங்களில் தர்பூசணி விற்பனை கடைகள் முளைத் துள்ளது. ஆந்திராவில் விளையும் பழங்கள் வேன்களில் கொண்டு வரப்படுகிறது.ஒரு பழம் 2 கிலோ விலிருந்து 7 கிலோ வரை உள்ளது. ஒரு கிலோ ரூ 20 க்கும் ஒரு துண்டு ரூ.5,10க்கு விற்பனை செய்யப்படுகிறது.மக்கள் வெப்பத்தை தணித்து கொள்ள முழு பழமாகவும், துண்டுகளாகவும் வாங்கிச் செல்கின்றனர்.வியாபாரி சுல்தான் அலாவுதீன் கூறியதாவது: தர்பூசணி பழங்கள் ஆந்திராவிலிருந்து கொண்டு வரப் படுகிறது. பழ விற்பனையோடு, தர்பூசணி சாறுடன் சர்பத் சீனி கலந்து ஜூஸ் தயாரித்து கொடுக்கிறோம், நல்ல விற்பனையாகிறது, என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**திண்டுக்கல் நகர், புறநகர் பகுதிகளில் வாகன ஓட்டிகளை சுண்டி இழுக்கும் கோழிக்குஞ்சுகள்**



திண்டுக்கல் நகர், புறநகர் பகுதிகளில் சாலைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள கோழிக்குஞ்சுகள் வாகன ஓட்டிகளை சுண்டி இழுக்கின்றன. இறைச்சிதேவைஅதிகரிப்புகிராமப்புற மக்கள் பெரும்பாலானோர் நாட்டுக் கோழிகளை வீட்டில் வளர்த்து வருகின்றனர். இவற்றை வளர்த்து வீட்டு தேவைகளுக்கு போக மீதியை விற்பனை செய்வது வழக்கம். நாட்டுக்கோழிகளை விட கறிக்கோழி இறைச்சி விலை குறைவாக இருந்ததால், அதனை மக்கள் அதிகமாக வாங்கி சாப்பிட்டு வந்தனர். ஆனால் கறிக்கோழியை விட நாட்டுக்கோழி, வான்கோழி, போண்டா கோழி ஆகியவற்றில் அதிக புரத சத்துகள் உள்ளதால் அவற்றை தற்போது அதிகமாக வாங்கி உண்ண தொடங்கியுள்ளனர். இதனால் இந்த வகை கோழி இறைச்சிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. ஆனால் உற்பத்திகுறைவாகவேஉள்ளது.விற்பனைஅமோகம்இந்த நிலையில் வான் கோழி, போண்டா கோழி, கிரிராஜா உள்ளிட்ட கோழிக்குஞ்சுகள் மற்றும் வாத்து ஆகியவற்றை விற்பதற்காக தர்மபுரி வியாபாரிகள் பலர், திண்டுக்கல் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் முகாமிட்டுள்ளனர். இவர்கள் சாலை ஓரங்களில் வலை அமைத்து கோழிக் குஞ்சுகளை அடைத்து வைத்துள்ளனர். இதனை சாலையில் செல்வோர் ரசித்து பார்ப்பதுடன், வாங்கியும் செல்கின்றனர். இதுகுறித்து கோழிக் குஞ்சு வியாபாரி ஒருவர் கூறியதாவது:- சென்னை, திருச்சி, திண்டுக்கல் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா போன்ற வெளிமாநிலங்களுக்கும் சென்று கோழிக்குஞ்சுகளை விற்பனை செய்து வருகிறோம். தற்போது கிராமங்களில் மட்டுமின்றி நகர மக்களும் கோழிக்குஞ்சுகளை அதிகமாக வாங்கி செல்கின்றனர். அழகுக்காகவளர்க்கப்படும்கோழிகள்தற்போது புதிதாக பேசன் என்ற ஒரு வகை கோழிக்குஞ்சுகள் வந்துள்ளது. இந்த கோழிகளுக்கு மயிலைப் போல கொண்டை வளரும். இதனை பார்க்க அழகாக இருக்கும். மேலும் இவற்றின் கால்கள் முழுவதும் முடிகள் வளரும். இவற்றை திண்டுக்கல் நகர மக்கள் அழகுக்காக வீட்டில் வளர்க்க ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ‘வாட் வரி’ விதிப்பில் இருந்து தமிழ்நாடு தோட்ட கழகத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும் அரசுக்கு ஏ.ஐ.டி.யூ.சி. கோரிக்கை




‘வாட் வரி’ விதிப்பில் இருந்து தமிழ்நாடு தேயிலை தோட்டகழகத் துக்கு விலக்கு அளிக்க வேண்டும் என அரசுக்கு ஏ.ஐ.டி.யூ.சி. கோரிக்கை விடுத்துள்ளது.தேயிலைதோட்டகழகம்தமிழக அரசுக்கு பிளாண்டே சன் லேபர் அசோசியேசன் (ஏ.ஐ.டி.யூ.சி) தலைவர் டி. பாலகிருஷ்ணன் அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதா வது:- தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் தாய கம் திரும்பிய மக்களின் மறு வாழ் வுக்காக தொடங்கப்பட் டது. கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தேயிலை ஏல மையத் தில் விற்ற அதே விலையில் தான் இன்றும் ஏலம் எடுக்கி றார்கள். தேயிலை தூள் உற் பத்தி செலவு கிலோவுக்கு ரூ.93 என்ற நிலையில் ஏல மையத்தில் தேயிலை தூள் கிலோவுக்கு ரூ.15 முதல் 20 குறைவாக ஏலம் எடுக்கப்படுகிறது.இதனால் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் 2011-ம் ஆண்டு முதல் நிதி நிலையில் சிக்கி தவித்து வருகிறது. இதன் காரணமாக

தொழிலாளர்கள், பணியாளர் கள் ஓய்வு பெற்ற பின்பு வழங்க வேண்டிய நிதிப்பயன்கள் பணிக்கொடை, ஈட்டிய விடுப்பு சம்பளம், மருத்துவ விடுப்பு சம்பளம்வழங்காமல்உள்ளது.ரூ.21½கோடிகடன்இதேபோல் தமிழ்நாடு வன தோட்டக்கழகத்தில் ரூ.14 கோடியும், அரசு ரப்பர்தோட்ட கழகத்தில் ரூ.3 கோடியும்,யூகோ வங்கியில் ரூ.4.5 கோடியும் மொத்தம் ரூ.21.5 கோடி கட னில் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் உள்ளது. இத னால் அன்றாட செலவினங்க ளுக்கு கூட பணம் இல்லாமல் டேன்டீ நிறுவனம் பின்நோக்கி செல்வதைகாணமுடிகிறது.எனவே தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்துக்கு பங்கு மூலதனம் ரூ.100 கோடி என உயர்த்தி வழங்கி இந்த நிறு வனத்தின் நிதிநிலையை செம்மை படுத்திட வேண்டும். நிறுவனத்தின் அன்றாட செல வினத்துக்கும், பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக் கும் 2011-ம் ஆண்டு முதல் வழங்கப்படாமல் உள்ள பணப்பலன்களை வழங்கு வதற்கு ரூ.50 கோடிஒதுக்கவேண்டும்.விலக்குஅளிக்கவேண்டும்தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு 'வாட் வரி' விதிப்பில் சலுகை காட்டி யது போல் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்துக்கும் வாட் வரி விதிப்பில் இருந்து சலுகை காட்டினால் தேயிலை ஏல மையத்தில் ஏலம் எடுப்பவர்கள் அதிகமான தேயிலை கொள் முதல் செய்ய வாய்ப்பு உள் ளது. இதனால் தேயிலை தூள் தேக்கம் இல்லாமல் விற்பனை ஆகும். அம்மா குடிநீர் கடைகள் மூலம் சில்லரை விலைக்கு தேயிலை தூள் விற்பனைசெய்ய சிறப்பு சலுகை காட்ட வேண் டும். தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் அமைந்து உள்ள நிலம் வனத்துறைக்கு சொந்தமானது என்பதால் குத்தகை பாக்கியை முழுமை யாக தள்ளுபடி செய்ய வேண் டும். தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம், தமிழ்நாடு வனத்தோட்ட கழகம், அரசு ரப்பர் தோட்ட கழகம் ஆகிய 3 கழகங்களை ஒரே கழகமாக மாற்றி ஓய்வு பெற்ற நிர்வாக இயக்குனர்களை கொண்ட ஒரு குழு அமைத்து நெறிபடுத்த வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**கீரமங்கலம் பகுதியில், பயிர்களை காப்பாற்ற ஆழ்குழாய் கிணறுகளை தூர்வாரும் விவசாயிகள்**



கீரமங்கலம் பகுதியில் பயிர்களை காப்பாற்ற ஆழ்குழாய் கிணறுகளை விவசாயிகள்தூர்வாருகின்றனர்.வறட்சிமாவட்டம்புதுக்கோட்டை வறட்சி மாவட்டம் என்பதால் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பிலி ருந்து கிணற்று பாசனம் குறைந்து விவசாயத் திற்காக ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து விவசாயம் செய்து வருகின்றனர். தொடக்க காலத்தில் அதிகபட்சம் 350 அடி வரை ஆழ் குழாய் கிணறுகள் அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார்கள் மூலம் தண்ணீர் இறைத்து பாசனம் செய்து விவசாயம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் 350 அடி வரை அமைக்கப்பட்டுள்ள ஆழ் குழாய் கிணறுகள் தூர்ந்து விட்டதால் தற்போது தண்ணீர் இறைப் பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு மழை யின்மையால் ஆழ் குழாய் கிணறுகளில் தண்ணீர் வறட்சி ஏற்பட்டுள்ளது. மேலும் பழைய ஆழ்குழாய் கிணறுகள் மண் சரிந்து தூர்ந்துவிட்டது. அதனால் ஆழ்குழாய் கிணறு களில் தண்ணீர் இல்லாமல்போய்விட்டது.தூர்வாரும்விவசாயிகள் இந்நிலையில் விவசாயத்திற்கு தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய கீரமங்கலம் பகுதி விவசாயிகள் மண் தூர்ந்துள்ள ஆழ்குழாய் கிணறுகளில் சிறிய குழாய் மூலம் தூர்வாரிவருகின்றனர். சில நாட்களுக்கு முன்பு கீரமங்கலம் அருகில் உள்ள சேந்தன்குடி கிராமத்தில் கருப்பையா என்ற விவசாயி வீட்டில் குழாய் மூலம் தூர்வாரி மணல்

அள்ளப்பட்ட தால் அந்த ஆழ்குழாய் கிணற்றில் தண்ணீர் இறைக்கும் நிலை வந்துள்ளது. இதேபோல கீரமங்கலம், குளமங்கலம் மற்றும் சுற்றுவட்டார கிரா மங்களில் குழாய் மூலம் ஆழ்குழாய் கிணறுகளில் தூர்வாரும் பணிகள் தொடங்கி யுள்ளது.

## விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு பருத்தி வரத்து அதிகரிப்பு



விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு பருத்து வரத்து நேற்று அதிகரித்துகாணப்பட்டது.பருத்திவரத்துஅதிகரிப்புவிழுப்புரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு காணை, கோலிய னூர், தெளி உள்ளிட்ட பல் வேறு கிராமங்களில் இருந்து தினமும் ஏராளமான விவசாயி கள் வந்து தங்களது விளை பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

குறிப்பாக இந்த விற்பனைக் கூடத்தில் நெல், பருத்தி, சோளம், கம்பு, உளுந்து போன்றவை அதிகளவில் விற்பனைக்கு வருவது வழக்கம். அதன்படி தற்போது கோடை காலம் என்பதால் பருத்தி வரத்து அதிகரித்து காணப்படுகிறது. வழக்கமாக 1,000 முதல் 1,500 மூட்டைகளாக காணப்படும் பருத்தி மூட்டைகளானது நேற்று 2 ஆயிரம் மூட்டையாக அதிகரித்து காணப்பட்டது. ஒரு குவிண்டால் பருத்தி அதிகபட்சமாக ரூ.4,100-க்கும், குறைந்தபட்சம் ரூ.3,990-க்கும் விற்பனையானது. இதேபோல் நெல் வரத்து 500 மூட்டைகளாக காணப் பட்டது. ஒரு மூட்டை (75 கிலோ) ரூ.900 முதல் ரூ.1,650 வரை விலைபோனது. கம்பு வரத்து மிகவும் குறைந்து 20 மூட்டைகளாக காணப் பட்டது. ஒரு மூட்டை (100 கிலோ) ரூ.1,830-க்கு விலைபோனது.

தினகரன்

**தக்காளி வரத்து குறைந்தது: கிலோ ரூ25க்கு விற்பனை**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி சுற்றுவட்டாரத்தில் வடக்கிபாளையம், நெகமம், கோமங்கலம், கோட்டூர், சமத்தூர், ராமபட்டினம், கோபாலபுரம், சூலக்கல், கோவில்பாளையம், கோவிந்தாபுரம், தொண்டாமுத்தூர், சிங்கநல்லூர் உள்ளிட்ட கிராம பகுதிகளில் தக்காளி அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. விளைச்சல் அதிகரித்தவுடன் அறுவடை செய்யப்பட்டு மார்க்கெட்டுக்கு மொத்த விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.
கடந்த சிலமாதங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால், பல இடங்களில் தக்காளி செடியிலேயே பழுத்து கீழே விழுந்து அழுகின. மேலும் பல கிராமங்களில் தக்காளி விதைப்பு இல்லாமல் இருந்ததால், தற்போது அதன் விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக கடந்த ஒரு வாரமாக மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து வழக்கத்தை விட குறைந்துள்ளது. கடந்த மாதம் இறுதியில் ஒருகிலோ தக்காளி அதிகபட்சமாக ரூ.10க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது தக்காளி வரத்து மிகவும் குறைந்துள்ளதால் நேற்று மார்க்கெட்டில் ஒருகிலோ தக்காளி ரூ.23 முதல் ரூ.25வரை விற்பனை செய்யப்பட்டது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோய்

கிருஷ்ணகிரி, : தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோய் அதிக அளவில் பரவி வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 16 ஆயிரம் எக்டர் பரப்பளவில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது அரசம்பட்டி, மஞ்சமேடு மற்றும் கங்கலேரி பகுதியில் உள்ள தென்னை மரங்களில் எரிப்பூச்சிகள், கருந்தலைப் புழுக்கள், செம்பான் சிலந்திகள் போன்ற பூச்சிகளின் தாக்குதல் போல் தற்போது தஞ்சாவூர் வாடல் நோய் எனும் பென்சில் பாயின்ட் நோய் தாக்குதல் பரவலாக காணப்பட்டு, பெரிய பொருளாதார

இழப்பை தென்னை விவசாயிகளுக்கு ஏற்படுத்தி வருகிறது. ஏற்கனவே போதிய மழையின்றி தென்னை மரங்கள் காய்ந்து வரும் நிலையில், இந்த நோய் படிப்படியாக பரவி வருவதால், மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகள்கலக்கம்அடைந்துள்ளனர்.

இந்நிலையில் கங்கலேரி பகுதியில் தென்னை மரங்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சபாநடேசன் நேற்று ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது: தென்னந்தோப்புகளை சரிவர பராமரிக்காதது, உர நிர்வாகம், பூச்சி நோய் நிர்வாகம் மேற்கொள்ளாதது, சரியான முறையில் வடிகால் வசதி செய்யாதது, உழவியல் முறைகள் கடைப்பிடிக்காதது போன்றவற்றால் பென்சில் பாயின்ட் நோய் தாக்குதல் தென்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மரங்களின் வளர்ச்சி குன்றியும், ஓலைகளின் அளவு சிறுத்தும், மஞ்சள் நிறமாக மாறி காய்ந்தும் விடுகிறது. விளைச்சல் 100 சதவீதம் குறைந்து மரத்தின் உச்சிப்பகுதி குறைந்து, காய்க்கும் திறன் குறைந்து மரங்கள் இறுதியில் காய்ந்து விடுகிறது.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் வேர்களுக்கு அருகில் சணப்பை அல்லது பசுந்தாழ் பயிர்கள் வளர்த்து, மடக்கி உழவு செய்ய வேண்டும். ஒரு மரத்திற்கு 5 கிலோ வேப்பம்புண்ணாக்கு மற்றும் 5 கிலோ மண்புழு உரமிட வேண்டும். ஒரு மரத்திற்கு ஒரு கிலோ பொட்டாஷ் வீதம் 4 மாதத்திற்கு ஒரு முறை இட்டு, நீர்பாய்ச்ச வேண்டும். ஹெக்சாகோனோசோல் ஒரு மில்லி அல்லது ஆரியோபஞ்சின் 2 கிராம் மற்றும் மயில்துத்தம் ஒரு கிராம் இதில் ஏதாவது ஒன்றை 100 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் இந்த நோயை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு விவசாயிகளிடம் இணை இயக்குநர் கூறினார். இந்த ஆய்வின் போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி, வேளாண்மை உதவ இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன், கிருஷ்ணகிரி வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் (அத்மா) துரைசாமி, விவசாயிகள் நாகராஜ், செல்வம், ராமமூர்த்தி உடனிருந்தனர்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு

உடுமலை, : அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மே 2ம் தேதி இந்த ஆண்டின் கரும்பு அரவை துவங்கப்பட உள்ளது. முன்னதாக நேற்று காலை 10 மணிக்கு ஆலை வளாகத்தில் இளஞ்சூடு ஏற்றுவிழா நடைபெற்றது. விழாவிற்கு மேலாண்மை இயக்குனர் இந்துமதி தலைமை தாங்கினார். அலுவலக மேலாளர் நவநீதன் முன்னிலை வகித்தார். சண்முகவேலு எம்.எல்.ஏ கலந்து கொண்டு இளஞ்சூடு ஏற்று விழாவை துவக்கி வைத்தார்.

இந்த ஆண்டில் அமராவதி சர்க்கரை ஆலையில் திருப்பூர், திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து 50 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரவை முடிந்த பின்னர் வெளி மாவட்டங்களில் இருந்து 50 ஆயிரம் டன் கொள்முதல் செய்து அரவை பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.அமராவதி அணை, புறந்தலாறு ஆகிய பாசனப்பகுதிகளில் கரும்பு பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக கொமரலிங்கம், மடத்துகுளம், தாராபுரம், பழநி, நெய்க்காரன்பட்டி, பல்லடம் ஆகிய பகுதிகளில் விவசாயிகளிடம் இருந்து கரும்பு கொள்முதல் செய்யப்படுகிறது. விழாவில் தலைமை பொறியாளர் கமல் பிரசாத், தலைமை ரசாயனர் சம்பத்குமார், கரும்பு பிரிக்கும் அலுவலர் ரவிச்சந்திரன்,அமராவதி கூட்டுறவு சர்க்கரை நிர்வாக குழு தலைவர் சின்னப்பன், உறுப்பினர்கள் வேலுச்சாமி, ஈஸ்வரன், சாமுராயப்பட்டி ராஜ்குமார் மற்றும் அலுவலர்கள் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு அரவைக்காக 814 புதிய விவசாயிகள் கரும்பு கொள்முதல் செய்ய பதிவு ெசய்துள்ளனர்.

**அவிநாசியில் ரூ.35 லட்சம் பருத்தி ஏலம்**

அனுப்பர்பாளையம், : அவிநாசியில் ரூ. 35 லட்சத்துக்கு பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்றது. ஏலத்திற்கு ரகப்பருத்தி சென்ற வாரத்தைவிட வரத்து 700 -மூட்டைகள் குறைந்திருந்தது. அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்றைய ஏல

விற்பனைக்கு 2800 பருத்தி மூட்டைகள் வந்து குவிந்திருந்தது. சென்ற வாரத்தைவிட வரத்து 700 மூட்டைகள் குறைந்திருந்தது. ஏலத்தில், டி.சி.எச். ரகப்பருத்தி குவிண்டால் ரூ.4100 முதல் 4650 வரையிலும், ஆர்.சி. எச் ரகப்பருத்தி ரூ.4100 முதல் 4530 வரையிலும், மட்டரகப்பருத்தி ரூ.1200 முதல் 1800 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.35 லட்சத்துக்கு பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்றது. போச்சம்பள்ளி, தர்மபுரி, கொள்ளேகால், நொக்கனூர், ஆத்தூர் கோபி, நம்பியூர், கிணத்துக்கடவு, அவிநாசி, புளியம்பட்டி, பலல்டம், பொங்கலூர், அன்னூர், குன்னத்தூர், திருப்பத்தூர், ஆம்பூர், ஆகிய பகுதிகளிலிருந்து 805 பருத்தி விவசாயிகளும், அவிநாசி, திருப்பூர், பல்லடம், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 25 பருத்தி வியாபாரிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

**கரூர் பகுதியில் பச்சை மிளகாய் விளைச்சல் அதிகரிப்பு போதிய விலை கிடைக்கவில்லை**

கரூர், : கரூர் பகுதியில் பச்சை மிளகாய் உற்பத்தி அதிகரித்தும் போதிய விலை கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.கரூர் அருகேயுள்ள பெரியதாதம்பாளையம், ஏமூர், முத்துலாடம்பட்டி, கணபதிபாளையம், போன்ற பகுதிகளில் கிணற்றுப் பாசனத்தில் பரவலாக மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பொதுவாக 6 மாதங்களில் மிளகாய் அறுவடை செய்யப்படும். மிளகாய் விதைத்ததில் இருந்து 75 நாட்களில் பச்சைக்காய்களை பறிக்கலாம். பொதுவாக பச்சை மிளகாய் எக்டேருக்கு 10முதல் 15டன் வரை மகசூல் கிடைக்கும். வத்தல் மிளகாய் எக்டேருக்கு 2முதல் 3டன் வரை மகசூல் பெறலாம். தற்போது பச்சை மிளகாய் கொள்முதல் விலை குறைந்துள்ளது. தற்போது விவசாயிகளிடமிருந்து ரகத்திற்கேற்ப கிலோ ரூ. 15 முதல் ரூ.20 வரை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். வியாபாரிகளுக்கு கிடைக்கும் லாபம் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை என்று விவசாயிகள் புலம்புகின்றனர்.

இதுகுறித்து விவசாயி ராமசாமி என்பவர் கூறுகையில், தோட்டக்கலைத்துறையினர் மிளகாய் சாகுபடிக்கு அடிக்கடி ஆலோசனை

வழங்க வேண்டும். மானியம் அளிக்க வேண்டும். மிளகாய் விதையை ஒரு கிலோ ரூ.600க்கு வெளிமார்க்கெட்டில் வாங்கி விதைக்கிறோம். அறுவடை செய்யும் வரையில் பல்வேறு செலவுகளை செய்து பயிரைக் காப்பாற்ற வேண்டியதிருக்கிறது. நல்ல மகசூல் இருக்கும் பட்சத்தில் 50 சென்ட் நிலத்தில் 20 மூட்டை விளைச்சல் மகசூல் கிடைக்கும். ஒருமூட்டையில் 100கிலோ வீதம் 2 ஆயிரம் கிலோ மிளகாய் எடுக்கலாம். முன்பு மார்க்கெட் விலை கிலோ ரூ.50வரை இருக்கும். நல்ல விளைச்சல் இருந்தும் தற்போது கொள்முதல் விலை குறைந்துவிட்டது. இதனால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை என்றார்.

**நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

ஈரோடு, : பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்னனர். 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 2 நாட்களுக்கு முன்பு 51 அடியாக இருந்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு 1703 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்தது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து 52.60 அடியாக காணப்பட்டது.

அணையில் இருந்து ஆற்றின் வழியே குடிநீர் தேவைக்காக 50 கனஅடி மட்டுமே நீர்திறக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு மாவட்டம் முழுவதும் பரவலாக மழைப்பெய்ததாலும், கோபி அருகிலுள்ள குண்டேறிப்பள்ளம் அணை நிரம்பி உபரிநீர் வெளியேறி வருவதாலும் பவானி ஆற்றில் நீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளதாலும் அணையின் நீர்மட்டம் சரிவடையாமல் உள்ளது. அணையில் மொத்தம் 5.08 டிஎம்சி., நீர்இருப்பு உள்ளது. தொடர்ந்து அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**வரத்து அதிகரிப்பால் வெங்காயம் விலை வீழ்ச்சி**

பெரம்பலூர். : வரத்து அதிகரிப்பால் விலைவீழ்ச்சி. நல்ல விலைக்காக சின்ன வெங்காயத்தை விவசாயிகள் மீண்டும் பட்டறையில் தேக்கி வைத்துள்ளனர். தமிழகத்திலேயே அதிகப்படியான சின்னவெங்காயம் பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படுவதால் கடந்த 10 ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டம் முதலிடம் வகித்து வருகிறது. இங்கு நடப்பாண்டு 6,432 ஹெக்டேரில் அதாவது 15,887 ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் அறுவடைசெய்த வெங்காயத்தை விவசாயிகள் வயல்களிலேயே பட்டறை அமைத்துப் பாதுகாத்து வந்தனர். சுற்று வட்டார வியாபாரிகளை வயல்களுக்கே அழைத்து வந்து பேரம்பேசி விற்பதற்கு மாற்றாக மாவட்ட நிர்வாகம் செட்டிக்குளத்தில் வெங்காயத்தை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. பின்னர் வாரா வாரம் சின்ன வெங்காய ஏலம் தொடர்ந்து நடந்து வருவதால், பட்டறை அமைக்கும் முறை படிப்படியாக குறைந்து வந்தது.

இந்நிலையில் கர்நாடகா மாநிலம் மைசூரிலிருந்தும், தமிழகத்தில் கோவை, பல்லடம், பொள்ளாச்சி, மதுரை, நெல்லை, காரமடை உள்ளிட்டப் பகுதிகளில் இருந்தும் தற்போது சின்னவெங்காயம் அதிகமாக வரத்தொடங்கியது. இது உள்ளூர் விவசாயிகளுக்கு பேர திர்ச்சியை அளித்துள்ளது. இதனை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் வியாபாரிகள் விவசாயிகளின் வயல்களுக்குசென்று மிகக்குறைந்த விலைக்கு, அதாவது, கிலோ ரூ. 8க்கும், ரூ. 10க்கும் பேரம் பேசுகின்றனர்.

உழவர் சந்தையில் கிலோ ரூ. 20க்கும், ரூ. 24க்கும் விற்கப்படும் சின்ன வெங்காயம், தினசரி காய்கறி மார்க்கெட்டில் ரூ. 24க்கும், ரூ. 30க்கும், கிராமப்புறங்களில் கிலோ ரூ. 32க்கும், ரூ. 40க்கும் விற்கப்படுகிறது. ஆனால் தங்களிடம் மட்டும் அடிமாட்டு விலைக்கு பேரம் பேசுகிறார்களே எனப் புலம்புகிற விவசாயிகள் தங்கள் சின்ன வெங்காயத்திற்கு உரிய விலைகிடைக்கும் வரை யாருக்கும் விற்காமல், ஏலத்திற்கும் கொண்டுசெல்லாமல், மீண்டும் வயல்களில் பட்டறை அமைத்து ேதக்கி

வைத்து வெளி வரத்து சீசன் முடிவதற்காக காத்திருந்து வருகின்றனர். இதன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் டன்னுக்கு மேற்பட்ட சின்ன வெங்காயம் பட்டறைகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இன்னும் 20, 25 நாட்களுக்குப் பிறகு விலையேறினால் அவை விற்பனைக்காக வெளியே வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

பாபநாசம், : திருவாரூல் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக உழவர் பயிற்சி மையத்தில் அரசு கால்நடை பராமரிப்புத்துறை, விவசாயத்துறை சார்பில் பாபநாசம் பகுதி விவசாயிகளுக்கு ஒருநாள் கண்டுணர்வு சுற்றுலா நடந்தது. பாபநாசம் வட்டாரத்தை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 10 பேர் அழைத்து செல்லப்பட்டனர். பயிற்சியில் விவசாயிகளுக்கு மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, நோய் தடுப்பு முறை குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் கதிர்செல்வன் பயிற்சி அளித்தார். ஏற்பாடுகளை கபிஸ்தலம் கால்நடை உதவி மருத்துவர் வடிவேலன் செய்திருந்தார். விவசாயத்துறையை சேர்ந்த ஜெயபிரபா, தனசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு கையேடு வழங்கப்பட்டது.